1059

உ

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

14 MAR 1918

# ஓமாந்தூர் காமாக்ஷியம்மன்

# நான்மணி மாலை.

திரிசிராமலை யாதவர்புரம்,

ம. வடிவேல்சாமி,

இயற்றியது.

1918.

Q25:38·2;10M
N18
179415

...ஜா பிரஸ், திருச்சி.

உ

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

ஓமாந்தூர்

காமாட்சியம்மன்

# நான்மணி மாலை.

இஃது

திரிசிராமலை வரகநகர் தமிழ்ச்சங்கத் தொருவராகிய
யாதவர்புரம் மகா-ள-ள-ஸ்ரீ வித்துவான்

**மதுரம். வடிவேல்சாமியவர்களால்**

இயற்றப்பெற்று

திருவாவடுதுறை ஆதினத்துத் தமிழ்ப்புலவருளொருவரும்
தமிழ்ச்சங்கப் புலவரும் S.P.G. காலேஜ்
தமிழ்ப்பண்டிதருமாகிய வித்துவான்

**அமிர்தம். சுந்தரநாதபிள்ளையவர்களால்**

பார்வையிடப்பட்டு மயிலஞ்சந்தை மண்டி மகா-ள-ஸ்ரீ
மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களின் மருகர்

**S. தியாகராஜனால்**

பெரியோர் உதவியைக்கொண்டு

திருச்சி நடராஜா பிரஸில், பதிப்பிக்கப்பட்டது.

1918.

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

# நான்முகம்.

---

## நேரிசை யாசிரியப்பா.

பூமகள் கொழுநனும் பாமகள் கொழுநனுந்
தாமகங் கொண்டே ஓமகப் பொருளாம்
ஒருவனை யுணரா மருளினை யகற்றப்
பெருமொளிப் பிழம்பா யுருவொடு தோன்றிப்
பீடு செய் தருளிய வேடுடைக் கொன்றை
நீடுமென் றொடைபுனை யாடுபாப் பணியரன்
வாமத் தொளிருந் தாமத் திருக்குழல்
சேமத் தையலாம் நாமத் தணிதிகழ்
பார்புகழ் ஓமாந் தூர்வள ரிறைவி
சீர்திகழ் காமாட்சிப் பேர்திகழ் பரையின்
பாதப் போதி லோதத் திகழ்தரும்
சீதத் தனித்தமிழ் போதப் பொலிய
நான்மணி மாலையென் மேன்மொழி மாலையை
நூன்முறை கோத்துத் தான்புகழுற்றான்
அவன்றான்
யாரெனக் கேட்பி னூரெழுந்தோங்க
நேரெழு செவ்விதி னிகழ்த்துவன் கேண்மோ!
வரவுரத் தென்பாற் றாமுறக் கற்றோன்
சிரபுரத் துயர்ந்த பரவுறு புகழோன்
நாற்கவி பாடும் ஆற்றலா லுயர்ந்தோன்
நூற்பொருள் விரித்துச் சாற்றுந் தகைமையோன்
படிமிசை கூறும் படியிசை
வடிவேற் சாமி வடிதமி ழோனே.

அ. சுந்தரநாதன்.

## சிறப்புப்பாயிரம்.

---

திரிசிரபுரம் சோடசாத்வய அவதானியார் மகா-௱-௱ ஸ்ரீ இராமலிங்கம் பிள்ளையவர்கள் குமாரரும், மருங்காபுரி சமஸ்தான வித்துவானும், செண்ட்ஜோசப்காலேஜ் தமிழ்ப் பண்டிதருமாகிய வித்துவான்

**மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களியற்றிய**

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கார்பூத்த பொழில்சூழ்ந்து கவினோங்கு
மோமாந்தூர் கருதி மேவுஞ்
சீர்பூத்த கயல் நெடுங்கண் காமாட்சி
யம்மையார் திருத்தாட் கன்பாய்
ஏர்பூத்த செந்தமிழி னன்மணிமா
லைபுனைந்தே யேத்தினானால்
பேர்பூத்த சிரகிரிவாழ் தரும் வடிவேல்
சாமியெனும் பெருமை யோனே.

---

திரிசிரபுரம் நாஷனல் ஹைஸ்கூல் உதவித் தமிழ்ப்பண்டிதர் மகா-௱-ஸ்ரீ தி. பொ. பழநியப்ப பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வேல்பழித்த நயனநலா ரிசைபலவும்
பூவையிசை விரவி யாரும்

மால்பழுத்த பொழிலோமாந் தூர்மருவு
காமாட்சி மலர்மென் குளில்

நூல் பழுத்த பாமாலை சாற்றினனல்
பலகவிதை நுவன்ற சீரின்

தால் பழுத்த பத்திமையான் கவிவடிவேல்
சாமியெனுந் தமிழ்வல் லோனே.

---

திரிசிரபுரம் எஸ்.பி.ஜி. ஹைஸ்கூல் உதவித் தமிழ்ப்பண்டிதர்
மகா-ள-ள-ஸ்ரீ நடேச முதலியார் அவர்களியற்றிய
அறுசீர்க்கழில் நெடிலடியாசிரிய விருத்தம்.

---

ஆயிழையார் நடைகற்பா னனம்பொருந்துந்
துறைமலிந்த வழகார் சோலை
சேயிடத்தும் பரந்தபுகழ் ஓமாந்தூர்
காமாட்சி தேவி தாட்கே
மீயினிக்குந் தமிழ்மொழிநூல் நான்மணிமா
லைப் பேரின் விரும்பிச் சொற்றுன்
வாயினிக்கப் பாடுதவிழ் வடிவேற்சா
மிப்பேரார் வண்மை யோனே.

மதுரை சிவஞானதீபச் சபைத்தலைவரும்,
திருநெல்வேலிப் புராண உரை யாசிரியருமாகிய மகா-ா-ஸ்ரீ

## ம. அழகர்சாமி பிள்ளையவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழில் நெடிலடியாசிரிய விருத்தம்.

---

இனியவளை யின்முத்தைக் கனியுமன
வனந்தனது வின்பின் முன்னந்

தனியவளை தனிலீன்ற முட்டையென
வடைகிடைக்குஞ் சால்பு மிக்க

பனியவளை நீரோமாந் தூரிறைவி
காமாட்சி பாதப் போதில்

கனியவளை நான்மணிமா லைப்பேரா
லோர் நூலை கவினச்செய்தான்.

அன்னவன்றான் யாரென்னக் கேட்குதிரேல்
அணிதமிழீர் அறைவன் கேண்மோ

சொன்னயமும் பொருணயமுந் தொடைநயமும்
தோன்றகவி சொல்லுந் தீரன்

கன்னலொடு செந்நெல்விளை சிரபுரத்துப்
பிறந்துநனி கற்றுே ரேத்த

வுன்னுபுகழ் படைத்தொளிரும் வடிவேற்சா
மிப்புலவன் உணரமாதோ.

உ

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

# ஓமாந்தூர்

# காமாட்சியம்மன் நான்மணிமாலை

## காப்பு

கட்டளைக் கலித்துறை.

பூவார் தரும்பொழிற் சூழுமோ மாந்தூர் புராதனிப்பேர்
சாவார் தருந்திரு நான்மணி மாலைக்கு நற்றுணையாம்
மூவா முதல்வன் பிரணவந் தானாய் முளைத்தெழுந்த
மாவா னனத்து விநாயகன் பாத மலரிரண்டே.

## வெண்பா.

மங்களமே யோங்குமோ மாந்தூர்கா மாட்சிகறை
யங்களமே லோன்பா லமர்வல்லி—சங்கரி
சிந்தைநைந்து யான்வருந்த வுஞ்சிவந்த கந்தபாத
வுந்தனுட்க னிந்ததில்லை யோ. 1

## கலித்துறை.

ஓதக் கடல்புடை சூழ்கின்ற தாமிவ் வுலகினிலே
ஏதக் கிரமந் தெரிந்துசெய் தேனிலை யின்னலறும்
போதக் கிருபா கரியடி யேன்பால் புரியருணீ
வேதக் கடல்மொண்ட விண்போல் விளங்கும் விமலையரே 2

### எண்சீர் விருத்தம்.

விமலியரே பூமானும் விளங்கோ மாந்தூர்
மேவிவளர் தாயேயென் வினைதீர்த் தாண்ட
வமலியரே யறஞ்சோட சாத்வ யஞ்செய்
யம்பிகையே பலவுலகு மாட்டி வைக்கும்
நிமலியரே பலசத்தி மயமாய் நின்ற
நேரிழையே சீரிளையா நெஞ்சேன் குற்ற
மேமலியும் புன்கவியுஞ் சீராக் கொண்டு
விரைந்துவந்தே வந்தருள்செய் மேலா மாறே. 3

---

### அகவல்

ஆறும் புல்லு மமுதப் பிறையு
மீறுஞ் சடையான் வேத நாயகன்
ஐந்தொழிற் கத்தன் அறுதொழி லத்தன்
மூந்துறு சித்தன் முழுதுநிர்ச் சித்தன்
பவள மேனியோர் பங்கின் மேகமுந்
தவள மதியுஞ் சார்விலும் பூவும்
செண்பக முகிழுஞ் சிறந்த துப்பும்
வெண்மல் லிகையும் விளையுங் கமுகும்
செந்நிற முத்தஞ் சேர்பத் திதழ்கள்
மன்னிய வேயு மாம்பிஞ் சிரண்டும்
ஆலிலை மடுவு மரம்பைத் தண்டுஞ்

சிலமார் நண்டுந் திராக நூலுஞ்
சேர்ந்துள பச்சைச் சிறுகொடி சுற்றிய
தேய்ந்து வளர்பரை இமாசலக்குமரி
அன்னை யீஸ்வரி யம்பிகை விண்ணிலா
மின்னிடை மஞ்ஞைகள் விரும்பி நடஞ்செயப்
பாடுங் கோகிலம் பலபொழில் யாரு
நாடுங் காவென நண்ணிய தருக்கள்
கதிர்மறைத் தேகிழல் காட்டும் பலமுகில்
வதிதலி னோங்கிய மாரிசெய் வளர்க்கும்
ஓமாந் தூர்வள ருத்தமி யரனுக்
கோமாந் திரமுணர்த் துங்குகன் தாயார்
மாட்சிபெற் றேங்கு மக்கா
மாட்சிபொற் றூளை வணங்குதி நெஞ்சே. 4

வெண்பா.

நெஞ்சே பலவா நினையாதே வுற்றதுணை
அஞ்சே யெழுத்துக் கரசியார்—அஞ்சேல்கேள்
எத்தகைய வித்தையில முத்தியசித் தத்தினையு
மெய்த்தகைய தாக்குவாள் மேல். 5

கலித்துறை.

மேலாரு மின்போ லிடை மாதர் தங்கள் விழிமயக்கால்
மாலாரு நெஞ்சே யழிந்தனை யென்னையிம் மாநிலத்துன்
போலாரும் பேதை யிலையிலை பூவளர் பொய்கையெல்லாஞ்
சேலாரும் பூமியோ மாந்தூர்கா மாட்சிதாள் சேர்விரைந்தே 6

### அறுசீர் விருத்தம்.

தேமாவுங் கலைமகளும் பன்னிருவா குடையகுகன்
செய்ய வேளின்-மாமாவும் பணிந்தேத்து
முமையாளைப் பல்வளவோ மாந்தூர் வாழும்
சேமாவு மைமாவுங் கலந்தவடி வம்பிகைதாள்
சேர்ந்து நெஞ்சே-யேமா வுன் செயலீண்டு
நடவாதென் றேமகிழ்வை யின்று கொண்டே 7

### அகவல்.

கொண்டனை நெஞ்சே குரங்கின் குணமே
ஒண்டவஞ் செய்ய வுணர்ந்திலை யின்னம்
ஆசை யறுத்திலை யன்னமுஞ் சொன்னமும்
வேசையு மண்ணும் விரும்பினை ஊனால்
ஆன வுடற்கூ னருத்தி வளர்த்தனை
ஞானதைக் கண்டு நல்வழி கூறியும்
செக்கடி வீணையாச் செவிக்கொளா திருந்தனை
அக்கடி தடமே அழியாப் பதவியா
யின்பஞ் சுவைத்தனை யினித்துப் பின்னே
துன்ப மீவதை சுத்தமா யோர்ந்திலை
கெட்டுந் தேர்ந்திலை கேள்மொழிப் பாவலர்
கட்டும் வனப்பால் கடுவினை யமுதா
வுண்ணவும் போமோ வுனக்குப தேசம்
பண்ணுவ னென்னெனில் பாவமா வாரி

மூழ்கினர்க் காக்கு முத்தியிழ் சேர்க்குந்
தாழ்குழ லோமாந் தூர்வளர் தையல்
காமாட் சித்தாய் கழலினை
மீமாட் சியுமே விளையு முண்மையே. 8

வெண்பா.

உண்மையே போக்கயா னேர்வழியுங் காணாத
துண்மையே தாயேநல் லோமாந்தூர்—திண்மையே
கொண்டமர்ந்த மண்டுகெந்த குங்குமங்க லந்தநின்கால்
தொண்டமர்ந்து கொண்டிருப்பது. 9

கலித்துறை.

பதுமையாச் சற்றேற யசைவற் றிருக்கப் பழகவென்று
லதுமைவா யேறுவா னுட்புகுந் தென்ன வழன்றனையுண்
பதுமையார் கூந்தல் மடவாரைக் கட்டிப் படுப்பதுமோர்
புதுமையாய் மிக்கக் களித்தனை நெஞ்சேயுன் புத்தியிதே. 10

எழுசீர் விருத்தம்.

புத்தியும் பொருளும் வித்தையுஞ் சீரும் பொய்யிலா மெய்யுல
கடையச் - சித்தியுஞ் செயலும் ஞானமும் தவமும் திருவடிக்
கன்பருக் களிக்கும் - நித்திய நிமலி புகழுமோ மாந்தூர் நிலை
பெறு மன்னைகா மாட்சி - சத்திய பாதந் துணைக்கொள்வை
நெஞ்சே சாருமற் றொருதுணை யிலதே. 11

## அகவல்.

தேவை யடைந்திடச் சீவகா ருண்யம்
ஆவதே வேண்டும் அடைவழி பாரெனுச்
சொல்லியு மறிபோற் றுள்ளினை மறந்தனை
நல்லன வல்லன நாடினை கூடினை
முடைகமழ் புன்புலால் மூக்கினை முட்ட
அடை யடை யென்ன வகட்டி லடைத்தனை
கொலையதா மென்னிற் கொலையிதேற் றுவர
விலைபூ பிஞ்சு மினியதாம் பழமும்
காய் கறி யுண்பதுங் கடுங்கொலை யாமென
வாய் தரத் தக்க வழங்கினை யல்ல கேள்!
வித்தையில் முளைக்கும் வித்தையா யுற்ற
சத்துவித் தோடு சார்வழி மண்ணுட்
புனலொடு செல்லும் புதுமையாய் வித்துத்
தனதாய் தழைக்கத் தத்துவ மடைந்திலை
ஆகையி லதனி லான்மம் வரவிலை
ஏகமாய் நின்ற விறைகலந் ததின்பின்
செடியா யோங்கிச் செழிக்க வதன்கிளை
படிகாய் பிஞ்சும் பறித்தாற் கொலையிலை
உகிர்களை வதுபோ லுறுமது நன்மையே
அகிலமீ தாரு மறிஞனுப் புகழும்

தாயு மானவர் சாற்றினர் பாரெனில்
வாயிற் றீங்கனி மறுத்துப் பேரூர்
இல்லா வொருவெளி யிலகிய கனிக்காய்
சொல்லார் பல்பெருஞ் சுகமும் போகமுஞ்
நீக்கிப் பசியால் நிலைகுலைந் துடன்மெலி
வாக்கிப் பித்தரை யடையப் பித்தராய்ச்
சென்றனர் பிருங்கி நிரேகம் தளரவு
நின்றிட முடியா நிலைமையான் மூன்று
காலி னடந்தனர் காண்தோற் பைக்குச்
சாலியோ தனமுந் தயிறுஞ் சாறுஞ்
மேதையுங் கள்ளு மேன்மே லூட்டி
பூதலத் தேயுடல் போற்றி யுலோபியாய்ச்
சீவன் வாழ்வதே சீவகா ருண்யம்
மாவது கஞ்சா வபினி போதையில்
சொக்குவ தேநல் முக்கிய யோக
மைக்குழ லியரை மருவலே போகம்
கண்டதே காட்சி கண்டிலை யென ளுத்
தண்டலைக் கவியாத் தவ்வினை மனதே
நம்மூ தாதையர் நவிலொணு மாந்தரும்
இம்மூ தூரி லிருந்திடக் கண்டிலை
மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை

ஐம்ப் திரவி லகலும் எனுங்கவி
யின்போற் கொஞ்சளா ளிருப்ப தகிலும்
இன்பமுந் துன்பமு மிடை விடை கொண்டனை
ஒன்று நிலைக்கக் கண்டிலை யிதனால்
இன்று முதலுனக் கிதுவுப தேசமாய்
ஓமாந் தூர்வாழ் உமைகா மாட்சி
யாமா தன்னைதாள் அடைகுவை நெஞ்சே. 12

வெண்பா.

நெஞ்சே நீ முன்பட்ட நிந்தையினி வாராதே
அஞ்சே லபய மளிப்பாள் நம்—மிஞ்சுபுகழ்
ஓமாந்தூர் காமாட்சி யுண்டத்தாய் பாதம்விட்
டேமாந் திராதே யினி. 13

கலித்துறை.

இனியா ருனக்கிப்ப டிப்புத்தி சொல்லுவா ரேழைநெஞ்சே
சனியா மயக்கா வரணத்தி னுற்றுன் றனைமறந்தை
யினியா ருறவா ரெனநினைத் தாய் நீ யினிநினைப்பை
கனியார் மலர்ச்சோலை ஓமாந்தூர் காமாட்சி காலிணையே. 14

எண்சீர் விருத்தம்.

இணையே யிலையே யிவளோ ரழகுக்
கெனவே மனமே தினமே நினைவாய்

பிணையோ மழையோ விழியே முகமே
பெரிதா மதியோ சிலையோ புருவந்
துணைசேர் மலையோ முலையே குறியே
துகளே யறுதேன் கூடோ வெனப்புன்
பெணையே வருணித் தனையே யினியோ
மாந்தூர் காமாட் சியைப்பேண் நெஞ்சே. 15

அகவல்.

சேய்மைச் கொரேவழி செப்பினர் அதுவும்
வாய்மையே அயோத்தி மன்ன னதனால்
மூவுல காளு முதன்மையோ டரிய
தேவரைக் காணுஞ் சிறப்புற் றனெனில்
அல்ல வென் றனை யசத்திய மொன்றே
சொல்லத் தகுந்ததாச் சூழ்வினை கொண்டனை
சூதனு முன்னே சுவர்க்கங் கண்டதாப்
பூதலத் தெவரும் புகல்கதை யுண்டே
சர்க்கரை நோயைத் தவிர்க்கையில் வேம்பு
நக்கல் ஏன் என் றனை நடையன மொத்த
பூங்குழ லாரெனும் பொதுமக ளாசையிற்
றீங்குறல் நிச்சயம் தேவேந் திரன்முனே
நாட்ட மாயிர நண்ணிய தும்மகம்
வேட்ட நகுடன் மேனு ளராவாய்
வீழ்ந்ததும் பிர்மன் வியன்சிர சொன்றுபோய்த்

தாழ்ந்தது மிலங்கை தணல் மய மானதும்
சுந்தோப சுந்தர சூரர் மாண்டதும்
அந்தநா ளசுர ரமுத மிழந்ததுங்
கையுறு மிடனெலாங் கனல்பற் றிடவென
மெய்யுறு வரமே வேண்டினோன் பத்மா
சூரன் வீந்ததுஞ் சொல்மேற் றிசைப்பதி
பாரில் சந்தனு வாகப் பிறந்ததும்
சாணெனுக் காட்டியுங் கத்தியப் பொய்கள்
வீணெனுச் சொற்றனை மேலுங் கூடலில்
தாய் பெண் டாண்டோன் சரிதையுங் கருதினை
பேய்கொண் டனையோ பிதற்றினை பலவாய்
நெய்யரி நேரென நெஞ்சே யசடையே
உய்வகை யென்ன வுவந்தனை யல்லகேள்
நன்மதி கிடையா நாய்க்குங் கீழுறும்
புன்மதி யுடையை நீ புலவன்போல் பேசினை
உண்மை தெரிந்திலை உலகத் தடர்ந்த
திண்மைசேர் மாயையே தெய்வமென் றெண்ணினை
ஆதரி சனத்தே யடுத்த பிம்பமாய்
மாதரைத் தோற்ற மனமுறு லுதிக்கும்
வஅறிஞனுங் தீப மதனால் விளக்கிட
வெறுவெளி யாகி விளங்குமத் தன்மையைக்
காண்குதி யென்னிலோ களவுபொய் வஞ்சனை

பூண்முலை மின்னார் போகம் பொறாமை
முதலிய புன்குண முற்றும் போக்கி
இதுவுப தேசமா யென்வழி நடத்தி
என்னெனில்
தேன்மாந் துறுபொறி சேரும் சோலையார்
ஓமாந் தூர்கா மாட்சி யுமையடி
எண்ணுவை யினிதே எண்ணுவை யினிதே 16

வெண்பா.

தேகம் வளர்க்கத் திரிந்ததுபோ துஞ்சாசாப்
போகம் வளர்க்கப் புறப்படுளே—மோக
வவித்தை யகத்தை யகற்றி யினித்த
வவித்தை சுகத்தை யடை. 17

கலித்துறை.

அடையாய தேநெறி ஊழூழியாக வழிவதென்றுங்
கிடையாச் சுகமோமாந் தூர்வாழ்கா மாட்சியைக் கேட்டிடுபோ
படையாயுலகெலாங்கொண்டோருமாண்டிடப்பார்த்திருப்பை
விடையா யெதுசொல் இருப்பதோ வீவதோ வேண்டுவையே

எண்சீர் விருத்தம்.

வேண்டுவகே ளெனவுனக்கோ ரிச்சை
தரினதுவும் வெறிக்குரங்கு கையிற்
கொள்ளி தந்தகதை யொப்பாம்
ஈண்டிதனா லுன்வழிசெல் கிலையான் சொல்
வழியே யிருத்தியெனி லோசுகமாம்

வாழ்வுறுவை யதுகேள்
தாண்டவஞ்செய் யாண்டவனார் புலிகாக்கு
மூர்த்தி தமதிடபா கத்திலுறை தாயார்கா மாட்சி
பூண்டபமாய்ச் செயும் ஓமாந்தூர் வாழும்
உமையைப் போற்றிமலர் தூற்றிபுகழ் சாற்றி
மகிழ்வாயே. 19

அகவல்.

வாயே தானுவே மண்ணினில் நன்மை
யாயே தாகிலு மறவழி நீ செய்த
துண்டோ விலையிலை யூத்தைதங் கியதொடும்
கண்டோர் பலருடைக் காசெலாஞ் சொற்றனை
பிறர் கோள் சொற்றனை பெரிதுபொய் பேசினை
அறவே நின்செய லதனை யாய்ந்திலை
நிசச்சொ லேது நிகழ்த்திலை வெறுப்பாம்
வசைச்சொல் பேசினை மன்னுயி ரெல்லாம்
தன்னுயிர் போலத் தாங்கிலை பிறவுள
வின்னுயி ருடலி னென்பு கடித்தனை
மென்றனை உருசி விரும்பினை ஒருகால்
உன்றனைக் கடித்தே வுறுதுயர்ப் பட்டனை
அன்றியும்
ஊக்கமா யிறைமே லொருபாச் சொல்லெனிற்
றூக்கம் வருவதாச் சொல்லத் துடித்தனை

காமப் பாட் டெனிற் கண்விழித் திரவெலாம்
மாமன் மைத்துனன் வரிசையிற் பாடினை
நாற்றத் திரேக நரரையும் பொருள்சே
ராற்றலால் முருகா வாயிரக் கண்ணு
வேதா முகுந்தா வேத நாயகா
நீதா வென்ன நிகழ்த்தினை யிதுவோ
முத்தி வரும்வழி முழுதுமுன் மடமைப்
புத்தியை யோட்டிப் புராதனி வராகி
சங்கரி யீஸ்பரி சடாதரி சாமள
சங்கரின் பின்னுறு தங்கை மனோன்மணி
நாரா யணிநா தாந்த நாயகி
ஆரணி யம்பிகா வகிலாண் டேஸ்பரி
என்னவோ மாந்தூர் இறைவிசா மாட்சியாம்
அன்னை தாள் பாடி யடைகுவை சுகமே. 20

வெண்பா.

சுகமே யுணருங்காற் றோன்றுகின்ற விந்த
செகமே யெனவிருந்தாய் தேரா—வகமே நீ
சம்புசிவன் பங்கினிலே தங்கியிருந் தெங்குமுறை
அம்பிகைமா யைவிளையாட் டால் 21

கலித்துறை.

ஆட்டிய பாவைநற் சூத்திர மற்றுலா டாததுபோற்
கூட்டிய மூச்சுப் பிரிந்திடிற் றேகமோ குப்பை கண்டாய்
வீட்டியல் மார்க்கம் விரும்பிமெய்ஞ் ஞானமா மேல்வழியை
வேட்டிலை நெஞ்சே யெனேயெனே நிற்குறு மேன்மையதே.

### எழுசீர் விருத்தம்.

மையலாங் கடவி லாழ்ந்துபுன் மடவார்
வாழையின் தண்டு நேர் துடையென்
மெய்யலாப் புணைமே லாசை கை யோட்டி
வீற்றிருந் தின்பவக் கரையை
உய்யலாம் வழியாய்க் களித்தனை நாடி
உன்பெரு மடமை யென் சொல்வேன்
செய்யளாந் திருவும் வளருமோ மாந்தூர்
சிற்பரை யடிப்பணி செய்யே 23

### அகவல்.

செய்யா ளிவள்மலர் சேர்தரு மோதி
மையார் மேகமோ மற்றது தானமும்
செய்யமா மலரோ செழுமதி யோவரி
நையுறல் சேர்தலி னன்றன் றிவள்முகம்
வேய்தான் றோளோ மிகுநஞ் சதில்வரும்
ஒய்விலாக் கோண லுளதது முலையே
மலையோ தாவரம் வளரு மன்றியும்
சிலபகல் மெத்தென சிலபகல் திண்ணென
ஒருபகல் தண்ணென ஒருபகல் வெச்சென
வருவதோ யில்லை மதனுயர்கி ரீடமோ
பால்கிடை யாதது பறவையோ தனது

தோலெலா மயிராய்ச் சூட்டிய தானைக்
கொம்பெனில் மாந்தரைக் கொல்லு மன்மதன்
அம்புசெய் புண்ணை அணைத்து மாற் றுது
மின்னே யிடையோ மிகுசுமை தாங்கா
தின்னவை யாலிவட் கிடிவள் எனவும்
நெஞ்சே நினைத்தனை நீடு விரும்பினை
பஞ்சேந் திரியமும் பாவைக் கீந்தனை
அந்தோ நெட்டுடல் ஆள்சுமந் தேகி
செந்தீக் கொளுத்த சிற்றெறலும் பொடுபொடிக்
குவையைக் கண்டனை குவலயம் பொய்யாந்
தோற்றமாகையிற் றொலைவீ ணவா நீ
ரூற்றும் வாவியும் உயர்பல சோலையும்
பூதியும் விளையும் பூமியோ மாந்தூர்
ஆதி யீஸ்பரி அம்பிகை திருவடி
போற்றிசெய் மெய்யாம் போகமும்
ஆற்றலும் பெறுவை யரும்பே றுனக் கிதே. 24

வெண்பா.

இதமா வதையே யியைந்தார் தருநிற்
கிதவா வதையே யியம்ப—வதையேன்
விழைவா யிலைநீ மிகவாய் சுவர்க்கத்
தழைவா யிலையடையத் தான். 25

கலித்துறை.

தான்மட்டுஞ் சோற்றுத்துருத்திக் கருத்துவர் தானமென்றோர்
வாள்மட்டுங் குட்டிக் கரணமிட்டாலும் வழங்கவெண்ணார்
பேன்முட்டுங் கூந்தற் பரத்தையர்க் கிவரைப் பிந்தவிட்டு
நீமட்டும் யான்சொல்லு நல்வழி நின்றிடு நெஞ்சகமே. 26

அறுசீர் விருத்தம்.

மேதக்க கேள்வி வேட் டோர்துறந்தோர்
 மறையுணர்ந்தோர் விபுதர் தங்கள்
பாதக்கஞ் சங்களையும் பார்த்திலைபின்
 பணிந்திலை நீ பாவ மூட்டை
யேதக்க தெனவாரிச் சுமந்தனைபின்
 படுநரக மேறுவாய் நான்
ஓதக்கேள் ஓமாந்தூர் காமாட்சி
 யடிபணிசீ ருருவ தற்கே. 27

அகவல்.

கேள்பி தாமனைக் கிழத்தியோ டொன்ற
நாள் போய் புழுவாய் நவிமலத்தோடே
பிண்டமாய் சிசுவாய்ப் பிறந்தனை தாயாம்
ஒண்டொடி குருதி யுருசி பருகினை
பேரும் பெற்றனை பிள்ளையாய்ச் சிறிய
தேரு ருட்டினை சிற்றில் சிதைத்தனை
வீதி திரிந்தனை மென்பொடியாடினை

ஓதி யுணர்தரப் பள்ளியி லுற்றனை
வாலிப மாகி மடவார் சிலவரைக்
கேலி செய்தனை கெடுமதி யால்கரி
குழிவீழ் தரநடை கொள்குவ தெனத்தீ
வழிவீழ்ந் தொழுகினை மதிம றந்தனை
மனைசேய் இல்லெனும் பாசம் வகித்தனை
இனையவுன் போலுள வெளியோர் பற்பலர்
மூப்புப் பிணிகொடு முதுகு வளைவுற
காப்புக் காலெனக் கைக்கோ லூன்றி
மாலைக் கண்ணராய் வரவரப் பின்னே
காலைக் கண்ணாய்க் கண்டுநெஞ் சுலர
இருமி வற்றல்போ லிளைத்து வாடி
வருபவுத் திரர்கள் மனைவியர் சேய்முதல்
உள்ளசுற் றத்தா ரொருங்கே கிழப்பிணம்
மாண்டாற் பொருள்நம் வயமுறு மெனவெணி
ஏண்டா கிழவா யினமிருக் கின்றனை
பொல்லாத் தீவினை புரிந்தோ னீயவை
யெல்லா மீண்டே யிருந் தநு பவித்தல்
வேண்டுமோ எனப்ப லிகழ்மொழி கரைய
கன்று மனத்தராய்க் காது கேளாராய்
மலசல மொன்றாய் வழியவிடுத்து
தலைசே ரிருகோ டுளகா ராப்பரிச்

செம்மயிர்ச் சேவகன் தெரிசனங் காட்ட
இம்மை யிவ்வள விவ்வள வேயென
கட்டையை விட்டுக் கழிந்ததுங் கண்டனை
சட்டென வுள்ளோர் தகித்ததுங் கண்டனை
பின்னையுந் தேர்கிலை பேதைநீ முன்முதல்
உன்னையா னறிவே னுன்செய லாவன
சாக்காடு தூக்கமாய்த் தரணியி னுற்றுன்
போக்காடி வீணாய் புத்தி யழிகுவை
பத்திசெய் வாயிலை பாதகங் களுக்கோ
எத்திசை யெனினு மிமைப்பி லோடுவை
தீக்குண மவைகளாற் சேர்பய னேததால்
நீக்குவை நின்னுடை நீடிய ரெல்லாம்
போக்கவோ மாந்தூர் பொற்பதி
காக்குங் காமாட்சி கழலிணை பணியே. 28

வெண்பா.

பணியா பரணத்தன் பாகத்தார் தாயைப்
பணியாவுன் மத்தர்களைப் பார்க்கத்—துணியாதே
சாதுசங்க மேவியங்கண்டாழ்ந்திரங்கி ஞானம்வந்து
தீதுசங்க ரித்துநெறி சேர். 29

கலித்துறை.

சேர்ந்திலேன் உன்றாட் கடியரைத் தேடித்தினந்தினமும்
ஆய்ந்திலேன் தொண்டு புரிந்திலேன் என்மனத்தையடக்கி
யோய்ந்திலேன் அன்னையோ மாந்தூர்காமாட்சி யுனதடிக்குக்
கூர்ந்திலேன் அன்பே எனினுநீ யாட்செய் கொடியனையே. 30

## எண்சீர் விருத்தம்.

கொடியனைய விடையினிலொட் டியாண மின்ன
 கோடிமணி யொளிவீசும் பணிகள் பூண்டு
படியனைய வுலகமெலாம் பரிந்து போற்றப்
 பாரதவஞ் செயவெண்ணிப் பாங்கர் பைம்பூஞ்
செடியணையு மோமாந்தூர்ச் சோலையின்கண்
 சேர்ந்ததிருக் காமாட்சி செம்பொன் வில்லி
அடியனையுந் தொண்டனென வேற்பாய் உன்னை
 யலதுதுணை யாரெனக் கென்னன்னையாரே. 31

---

## அகவல்.

அன்னையே யுன்றாட் கபயம் அபயம்
என்னையாண் டருள்செ யிறைவி யபயம்
தக்கன் குமாரி சங்கரி யபயம்
ஒக்க முப்பத் திரண்டறஞ் செய்த
தாயே யபயம் தமியேன் அபயம்
நாய னேற்கருள் நல்குவை அபயம்
அஞ்சக் கரத்தி யபயம் அபயம்
கஞ்சக் கரத்தி கருணைசெ யபயம்
மிஞ்சக் கரத்தி யந்தரே சிசிவக்
குஞ்சக் கரத்தி கொடியே னபயம்
செந்நெல் கன்னல்போற் செழிப்புறு நீர்வள

நன்னகர் ஓமாந் தூர்வளர் நாயகி
காட்சி தந்தருள் கன்னிகா
மாட்சியெந் தாயே மைந்தன்முன் இன்றே. 32

---

### வெண்பா.

இன்றே யொருநாள் இதுவும்போய் மற்றொருநாள்
சென்றே யுனதாயுட் டீருமே நன்றே
சுவற்றின்முட்ட வெள்ளெழுத்தா சொல்மனதே தூய
வவற்றை விட்டு நீ கெட்ட தால் 33

---

### கலித்துறை.

ஆலுண்ட கன்னி பரமேஸ் பரிநல் லருமறையாம்
காலுண்டு காக்கப் பசிவந்தபோது களிப்பளிக்கப்
பாலுண்டு சோறுண்டு வப்பால் சுவர்க்க பதியுமுண்டு
தோலுண்ட தாம்விளம் போற்றுய ரோடிடுஞ் சூழ்ந்தவர்க்கே.

---

### அறுசீர் விருத்தம்.

தவர்க்கா னந்தங் கொடுத்தருளுந்தாயே பரையே சஞ்சலமாம்
உவர்க்கார்க் கடலிற் புக்கேனை யுள்ளந் திருத்தி யுனதன்பர்
எவர்க்கா யினுமே தொண்டுசெய வின்னே யமைத்தது னரு
[ள்புரிவை
சிவற்கா னந்த முறவிளைத்த தெய்வக் கொடியே திரிபுரையே.

அகவல்.

திரிபுரை யம்பிகை ஜெகத்கா ரணியுமை
வரிநெடுங் கண்ணி மாதவக் கன்னி
பராபரி முராரி பகவனின் தங்கை
நிராதரி நிராமய நின்மல ரூபி
வேதாந்த போதக வித்தக நாத
நாதாந்த வீட்டு நாயகி மனோன்மணி
சிவராத்திரியிற் செயும் பூசனையெலாம்
நவராத் திரியி னயந்தகௌ மாரி
இமய குமாரி யிறையோன் வாமத்
தமையும் புராதனி யாளியூர் நீலி
கால காலி கபாலி சடாதரி
சூல தாரி தூயபோர்க் காளி
சங்கரி கங்கா தரியுல காட்டும்
புங்கவி யோமாந்தூர் எனும் புகழ்ப்பதி
தங்குகா மாட்சித் தாயே
சரணம் சரணம் சரணம் சரணமே. 36

---

வெண்பா.

சரணமே வற்செய்யச் சார்ந்துளேன் மெய்கூ
சரணமே வர்ச்சுனற்காத் தாய் நீ—தருணம்
அருண முகத்தியம்ப ரத்திசுத்த மான
கருணை யகத்தி யெனக்கா. 37

### கலித்துறை.

காவடி பூவுங் கடப்பமுஞ் சூட்டிய கந்தர் தங்கக்
காவடியார்பழ நிப்பதியாரனை கல்மனத்தே
காவடி யாடிருக் காமாட்சி யம்மையின் கால்நினைக்கக்
காவடி யாரவர்க் கிச்சைபோ லீந்திடுங் கற்பகமே. 38

### அறுசீர் விருத்தம்.

மேருவிலோர் கைதாரு காவனத்து
மாஞெருகை மேலே தூக்கும்
ஊருவிலோர் கையுடையான் திருவாட்டைப்
புலி காக்கு மூராந் தில்லைச்
சீரும்விலோ தனம்பரவு நாஞ்சில் மதில்
ஆலயமுஞ் சேரோ மாந்தூர்
சாரும் விலோ சனக்கருணைச் சாகரிகா
மாட்சியரே சரணம் நானே. 39

### அகவல்.

நானே பலபல நடுநிலை யோதியுந்
தானே நானெனத் தருக்கி நின்றனை
வைம்புலன் பாணமா வாசை வில்லதா
வம்புள கொங்கையர் வலிபடை யாக்குடை

மதியமா விருளே மதமா வாய்மிகு
சதிசெயு மன்மதன் தாளிணை போற்றினை
வழி வழி வணங்கினை வருபயன் கொடிய
பழியு நரகமாப் படித்துந் திரிந்தனை
நல்லன விட்டனை பொல்லனதொட்டனை
ஒல்லென துட்டனை யோடிக் கூடினை
மாயப் பசாசால் வாடினை யேச
காயப் பசுபதி கறைமிடற் றேனுருப்
பாதியாய் நின்றும் பலவளமோங்கும்
பண்ணையுஞ் செய்யும் தண்கதிர் முத்தும்
சங்கமு மூரும் துங்கவான் பொழிலும்
ஊருள மரனெலா மொருவிட நின்றென
வடர் தரு சோலையு மருமக சாலையும்
அன்னகேதன மன்னிய மாடமும்
எவ்விதச் சிறப்பு மவ்விட நின்றே
எழுந்த தாமென வுயர்ந்த சீரும்
பஞ்ச பாதக மஞ்சிட வோட்டிடும்
பான்மை யுளதரு நோன்மை திகழ்திரு
நீறு விளை தரு மீறிலா விடமும்
சூழு மோ மாந்தூர் வாழு மம்பிகை
பூமாட்சி யோங்கக் காமாட்சி யென்னு

நாமமாய் நின்றும் ஆமைபோல் ஐந்தும்
ஓரோவழி நிறுவினர் அவர்தமக் கும்பினே
கற்றிலரென்னினும் சிற்றடி போற்றும்
பத்தருக் கும்அருள் பாலித் தமர்தரும்
பார்வதி யென்னவும் பேர்பல வாறாய்
ஆனநாயகி அகிலாண் டேஸ் பரி
ஞானப் பூங்கோதை நாரி மயேஸ்பரி
பொற்றா ளேத்திலை புகழெழுதுஞ் சாற்றிலை
வெற்றா ளாகவு மீண்டிலை பாவமாம்
பாரம் சுமந்தனை பாவம் ஐயசோ
சுடர் விளக் கிருந்தும் படுகுழி விழுந்தனை
என்னே யுன்மதி யென்னே யென்னே
மண்முத லாசைய மாயைக் கனவெனக்
கண்டனை நீத்துக் கதிபெறும் வழியே
நாடுவை யதனாற் கூடுவை யின்பம்
நெஞ்சே யிவ்வழி நேருவை
அஞ்சேல் அஞ்சேல் அடைவை மங்களமே.

முற்றிற்று.

# நடராஜா பிரஸ்,

நெ. 18 நடு வெற்றிலைக்காரத் தெரு,

— கோட்டை, திருச்சினாப்பள்ளி. —

---

எமது அச்சுயந்திர சாலையில் தற்காலத்திற்கேற்ற புது தமிழ், இங்கிலீஷ் அட்சரங்களுடனும், நூதன பார்டர்களுடனும் அவரவர்களின் விருப்பத்திற்கேற்றபடி பலவிதமான ஜாப் வேலைகளும், புஸ்தக பாரங்கள் முதலான அச்சுவேலைகளும், பயிண்டிங், "ரப்பர்முகர்" மிகவும் வேலைப்பாடுடன் சுத்தமாகச் செய்துக் கொடுக்கப்படும். சார்ஜ் சரசம். ஒருமுறை ஆர்டர் கொடுத்து பரிக்ஷியுங்கள்.

J. S. நடராஜன்,
புரோப்ரைட்டர்.